# ஆண்டின் 15ஆம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-07-14

***(இன்றைய வாசகங்கள்:***

*இறைவாக்கினர் ஆமோஸ் நூலிலிருந்து வாசகம்.* 7: 12-15,

*பல்லவி: ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்:,*

*திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய் திருமுகத்திலிருந்து வாசகம்.* 1: 3-14,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 6: 7-13)

***திருப்பலி முன்னுரை***

*இயேசுகிறிஸ்துவில் அன்பார்ந்த இறைகுலமே! இன்று நாம் ஆண்டின்* 15*ஆம் ஞாயிறை கொண்டாடி மகிழ்கின்றோம். திருப்பலி வழிபாட்டில் பங்கேற்க அணியமாகி, கூடி வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும்; என் அன்பு வாழ்த்துகளைக் கூறி மகிழ்கிறேன். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் அனைவரும், அவரது பணிக்காக அனுப்பப்பட்டிருப்பதை இன்றைய திருவழிபாடு நமக்கு நினைவூட்டுகிறது. இயேசுவை அறியாதவர்களிடம், அவரைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் கடமை உண்டு என்பதை உணர அழைக்கப்படுகிறோம். இயேசுவிடம் பிறரைக் கொண்டு சேர்க்கும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*தொண்டு ஏற்க வந்த இறைவா!*

*திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள். துறவிகள் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறைவார்த்தையின் ஒளியில் தங்களை ஈடுபடுத்தி, அவ்வொளியில் பயணிக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அழைத்தலின் தொடக்கமே எம் இறைவா!*

*அழைப்பின் பலனை நாங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து அதில் எங்களை ஈடுபடுத்த தேவையான மனதைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அறுவடையின் இறைவா!*

*உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் உம் வார்த்தையை முழக்கமிடவும், எல்லா மக்களையும் உமது இறையரசுப் பணியில் கூட்டிச் சேர்க்கவும் தேவையான ஆற்றலைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*எங்கள் ஆயனாகிய இறைவா!*

*நாங்கள் பிற இனத்தவர்க்கும் உம்மைத் தெரிந்து கொண்ட மக்களுக்கும், உமது பெயரை எடுத்துரைக்கும் கருவிகளாகத் திகழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வழிகாட்டும் இறைவா!*

*உமது சீடர்கள் பெற்ற துன்பங்களைப் போன்று நற்செய்தியின் பொருட்டு வரும் துன்பங்களை நாங்கள் ஏற்று இறைப்பணி செய்ய வேண்டிய வரத்தைத் தரவேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஆண்டவராகிய இயேசுவே,*

*நீர் எங்கள்மேல் சுமத்தியுள்ள நற்செய்திப் பணியை நன்கு ஆற்ற, உமது தூய ஆவியின் ஆற்றலால் எங்களை நிரப்பும், என்னையும் ஓர் இறைவாக்கினராக நீர் அழைத்திருக்கின்றீர் என்பதே எனக்கு வியப்பாகவும், மலைப்பாகவும் இருக்கிறது. ஆயினும், உம் அழைப்பை ஏற்கிறேன். நன்றி கூறுகிறேன். என் வாழ்வும், பணிகளும் என் இறைவாக்காக அமையட்டும். உலகைப் பற்றிக்கொள்ளாமல், உம்மையே பற்றி வாழ அருள்தர இறைவா உமை மன்றாடுகின்றோம்.*